# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் – 2018

21



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

## பொருளடக்கம்


1. திரிகடுகத்தில் வாழ்வியல் சிந்தனைகள் - 1

*முனைவர் க.சகாய கிரேஸி

2. நாலடியார் காட்டும் வாழ்வியல் - 4

*முனைவர் அ.ஜான்சிமேரி

3. குறுந்தொகை காட்டும் முல்லைத் தலைவி - 7

*முனைவர் சௌ.ஜான்சிராணி

4. சங்க இலக்கியங்கள் கட்டும் இறப்புகுறித்த வாழ்வியல் நிகழ்வுகள் - 10

*முனைவர் ஜெ.அருள் இருதய ஜெயந்தி

5. திருக்குறள் காட்டும் மனித மாண்புகள் - 13

*முனைவர் தே.ராஜசீலி

6. இயேசு காவியத்தில் வாழ்வியல் கூறுகள் - 15

*அருட்சகோதரி முனைவர் இ.அல்போன்சாள்

7. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள் - 18

*அ.கிருத்திகா

8. சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல் - 2

*முனைவர் ம.தனலட்சுமி

. இனக்குழு மக்களின் வாழ்வியல் சிந்தனையில் வேட்டையாடுதலும் - பாதீடும் -

*முனைவர் க.குமரகுருபரன்

. இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

# நாலடியார் காட்டும் வாழ்வியல்

*முனைவர் அ.ஜான்சிமேரி, உதவிப்பேராசிரியர், ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம்.

**முன்னுரை**

பதினெண்கீழ்கணக்கு நூல்கள் நீதிநெறிகளை எடுத்து இயம்புவனவாக அமைந்துள்ளன. நான்கடிகளில் சொல்லழகும் பொருளழகும் மிளிர நீதிக்கருத்துக்களையும், வாழ்வியல் கருத்துக்களையும் சமணமுனிவர்கள் நாலடியார் வாயிலாக சொல்லோவியமாக விரிவாக எடுத்துரைக்கின்றனர். நானூறு வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் நாலடியார் என்றும் நாலடி நானூறு என்றும் அழைக்கப்படுகிறது. இந்நூல் வேளாண் வேதம் என்றும் அறியப்படுகிறது. இந்நூலில் இடம்பெற்றுள்ள நிலையாமைக் கருத்துக்களையும் வாழ்வியல் செய்திகளையும் இக்கட்டுரை வாயிலாக காண்போம்.

**நிலையாமை**

இப்பூவுலக வாழ்வு நிலைத்து நிற்கும் தன்மையற்றது. இவ்வுலகில் எப்பொருளும் நீண்டகாலம் நிலைத்து நிற்காது. மனிதன் வாழும் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு நாலடியார் செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை என்ற மூன்றையும் வாழ்வியல் செய்திகளாக விரித்துரைக்குகின்றது.

**செல்வம் நிலையாமை**

செல்வம் எவரிடத்தும் நிலைத்து நிற்காது. வண்டியின் சக்கரத்தைப் போன்று மாறி மாறி சுழன்று வரும். செல்வம் சகடக்கால் போல வரும், இத்தகைய செல்வம் கிடைக்கும் போது பிறருக்கு உதவி செய்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அறுஞ்சுவை உணவை உண்ணும் போது வேண்டாமென்று உதறி விட்டுச் சென்ற செல்வரும் பிற்காலத்தில் வறியவராகி உணவை பிச்சை எடுப்பர். செல்வமாகிய ஒரு பொருள் நிலையாக உள்ளது என, மனதில் எண்ணி கவலையின்றி வாழும் வாழ்க்கை நன்னெறியாகாது. செல்வரும் வறியவராகும் சூழல் எதிர்பாரத நேரத்தில் வரும், ஆதலால் செல்வம் எவரிடத்தும் நிலைத்து நிற்காது என்பதை புரிந்து கொண்டு வாழவேண்டும்.

அரசனும் தீவினை புரிந்தால் செல்வம் இழந்து வறியவராவர் வாழ்நாள் கரைந்து கொண்டே இருப்பதால் நிலையற்ற செல்வத்தைக் கொண்டு உடனே அறம் செய்ய வேண்டும். பொருளை முதுமை காலத்திற்காக சேர்த்து வைக்காமல் இளமையிலேயே அறம் செய்தவர் புண்ணிய உலகம் செல்வர். குறிக்கப்பட்ட காலத்திற்கு மேல் யாரும் உயிர் வாழ முடியாது. எனவே, விரைவில் அறச் செயல்கள் செய்து நலம் பெறல் வேண்டும்.

**ஆற்றப் பெரும் பொருள் வைத்தீர் வழங்குமின் நாளைத்**
**தழீஇம்தழீஇம் தண்ணம் படும்.**

அருளுடையவராதலே பிறவியின் பயன், எனவே அறம் செய்து வாழ வேண்டும். மறுமையை எண்ணி வாழாதவர்களின் செல்வம் மின்னல் போல் தோன்றி அழியும். செல்வம் பெற்றவன் அதனை அறவழியில் செலவு செய்யவில்லை என்றால் செல்வம் இழந்தவனாகவே கருதப்படுவான். நல்ல வழிகளில் செல்வத்தை செலவு செய்யாதவர்கள் தேனீயைப் போல சேர்த்து வைத்ததையெல்லாம் இழந்து விடுவர். செல்வம் எப்போதும் நிலைத்து நிற்காது, ஆதலால் பிறருக்கு உதவி செய்து தாம் பெற்ற செல்வத்தை செலவு செய்து வாழ்வோம்.

**இளமை நிலையாமை**

இளமைக் காலத்தை அறவழியில் பயன்படுத்தாது முதுமை வந்தபிறகு வருந்துவது, கோலையூன்றித் துன்புற்றுத் தள்ளாடுபவர்கு ஒப்பாவர். இளமையிலே அறத்தோடு வாழ்தல் வேண்டும். வாழ்நாள் முழுவதும் சிற்றின்பம் நாடுவோர் பேரின்ப நெறியை அடைய முடியாது.

**"புரை தீரா மன்னர் இளமை மகிழ்ந்தாரே கோலூன்றி இன்னாங்கு எழுந்திருப்பார்"**

இளமையிலேயே பொருள் சேர்த்தலில் பற்று வைத்தால் அனைவருடைய தொடர்பும் குறைந்து வாழ்நாளும் கெடும்.கடலுக்குள் மூழ்கும் மரக்கலத்தைப் போல அவர்களுடைய வாழ்க்கை பிற்காலத்தில் அமையும். வந்ததே ஆழ்கலத் தன்ன கலி- இல்வாழ்விலிருந்து நீங்காமல்

காமவழியில் செல்வதற்குரிய சிற்றறிவு உடையவருக்கு பாதுகாப்பான உண்மையான இன்ப நெறியில் செல்லும் வாய்ப்பு ஏற்படுவது இல்லை. இளமையில் அழகாய் இருந்தவர்கள் முதுமையில் கூன் விழுந்து உடல் நடுங்குவதால் காமத்தை விட்டு விட்டு பலவேறு அறச்செயல்களில் ஈடுபடவேண்டும். இந்த உலகம் ஒரு தாய் தனது தாயைத் தேடித் தாவிச் செல்லும் இயல்புடையது. இன்று இளமையாக இருப்பவர் நாளை முதுமையடைந்து இறப்பது இயல்பு. ஆதலால் இளமை நிலையற்றது என்பதனை அனைவரும் அறிந்து வாழ வேண்டும்.

**யாக்கை நிலையாமை**

எவ்வளவு பெரிய மனிதனானாலும் ஒருநாள் இறப்பது உறுதி ஆதலால் நம் உடல் உறுதியாக இருக்கும் போதே அறம் புரிந்து நற்கதியை அடைய வேண்டும்.வெண்கொற்றக் குடைநிழலில் சென்ற மன்னரும் இவ்வுலகில் ஒருநாள் இறப்பர்.மணற்பாறையே பிணப்பாறையாக மாறும் நிலை வரும்,ஆதலால் யாக்கையின் நிலையாமையை உணர்ந்து விரைந்து நன்மைகள் புரிந்து அறத்தோடு வாழ வேண்டும். இவ்வுலக வாழ்வு மாயை இதில் அதிக இனிபம் உண்டென்று கருதி மயங்கி வாழ்தல் பேரழிவைத் தரும். மாயையை நாடிச்செல்லாமல் வாழ்வை அறவழியில் பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். நமது உயிர் வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது எனவே பிறவித் தடுமாற்றத்தைத் தடுக்க முயற்சி செய்பவரே உயர்ந்தவர்.

வாழ்நாள் உலவாமுன் ஒப்புரவாற்றுமின் யாரும் நிலவார் நிலமிசை மேல்

புல் நுனியிலுள்ள நீர் போன்றது உடல்.நல்ல உடல் நலம் படைத்தவர்கள் நற்செயல்கள் செய்வதில் காலம் தாழ்த்தக் கூடாது.இளமை முதலே அறச் செயல்கள் செய்து வந்தால் இறக்கும் போது துன்பம் உண்டாகும். கருவியாக வந்த உடம்பிற்கே நற்செயல்கள் செய்து கொண்டு இராமல், உயிருக்கான மேன்மையான செயல்களைச் செய்ய வேண்டும்.

**சினம் இன்மை**

பிறர் மதித்தாலும் மதிக்காவிட்டாலும் ஆன்றோர் கோபம் தவிர்த்து அறத்தை கொள்கையாகக் கொண்டு, இன்பத்தைக்கண்டு மிரளாமல் உயிரை மாய்த்துக் கொள்ளாமல் தம் உயர்நிலைக் கருதி நன்னெறியுடன் நற்செயல்கள் புரிந்து வாழ்வார்கள். கீழ்மக்களுக்கெதிராக மேன் மக்கள் ஒருபோதும் சினம் கொண்டு தாழ்வான சொற்களை பயன்படுத்தமாட்டார்கள். அன்புடையார் கூறும் கடுஞ்சொல் அயலவர் கூறும் இன்சொல்லினும் நல்லது. தகுதியற்றவர்கள் சொல்லும் சொற்களுக்கு சான்றோர் சினம் கொண்டு வருந்தி உடலை துன்பத்திற்குள் செலுத்தமாட்டார்கள்.

**"வான்கவிந்த வையகமெல்லாம் பெறினும் உரையற்க**
**பொய்யோ டிடைமிடைந்த சொல்" என்கிறார்.**

**தீவினையச்சம்**

செல்லும் கதிக்கு உறுதுணையாக தீவினை அகற்றி நல்வினைகள் புரிந்து வாழ வேண்டும். வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்து வருவது உலக இயல்பு, இதனைப் புரிந்துக் கொண்டு தீவினைகள் செய்யாமல் நன்மைகள் செய்து பிறர் மனம் காயப்படாமல் வாழ வேண்டும். பிறருக்கு உதவி புரியும் வள்ளல் தன்மையே ஒருவருக்கு உயர்ந்த புகழைத் தரும். தீயைவிட மிகக் கொடிய காமதீவினைச் செயல் புரியாமல் அறத்தோடு வாழ வேண்டும். நாலடியார் இதனை

**"ஊபகாரம் செய்ததனை ஓராதே தங்கண்**
**ஆபகாரம் ஆற்றச் செயினும் - உபகாரம்**
**தாம்செய்வ தல்லால் தவற்றினால் தீங்கூக்கல்**
**வான்தோய் குடிப்பிறந்தார்க் கில்" என்றுரைக்கின்றது.**

**மேன்மக்கள்**

தவறான வழியில் செல்லாமல் சிறந்த செயல்கள் புரிந்து வாழ்வது மேன்மக்கள் இயல்பு. ஒருநாள் பழகி பிறர் உள்ளத்தைக் மேன்மக்கள் கவர்ந்து விடுவார்கள். மேன்மக்கள் கல்வியறிவும் மெய்யுணர்வும் பெற்று அவையில் அடக்கமும் சிறந்த கண்ணோட்டமும் உடையவர்களாக திகழ்வார்கள். கல்வியே தன் மக்களுக்குத் தேடி வைக்கும் சிறந்த செல்வமாக மேன் மக்கள் கருதுவர். நல்லொழுக்கம் உயர் குடிப்பிறந்தாருக்கு இயல்பாகவே அமையும். இன்சொல், பிறருக்கு உதவுதல்,மனத்தூய்மை அன்பு போன்ற நற்பண்புகளின் இருப்பிடம் உயர்குடிப்பிறப்பாகும். வறுமை நிலையிலும் உயர்குடியில் பிறந்தவர்கள் தம் கடமைகளை செய்வதில் காலம் தாழ்துவதில்லை. மேன்மக்கள் தொடர்பே எல்லா நலன்களும் பெறுவதற்குரிய வழியாகும் என்பதனை,

**"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு". என்று விவரிக்கின்றது.**

பிறருக்குத் துன்பம் ஏற்படுத்துவது கீழ்மக்களின் இயல்பாகும். பேதையர் வாழ்வு வீணாக அழிந்து போகும். அவர்களால் இவ்வுலகில் எவராலும் எவ்வித நன்மையும் பெற முடியாது.

**அவையறிதல்**

நூல் நுட்பங்களை நன்கு அறிந்து நடக்கும் நல்ல புலவர்கள் மத்தியில் மற்றவர்கள் நாவடக்கமுடன் நடந்து கொள்ள வேண்டும். நூல்களின் கருத்தறிந்து சான்றோர் அவையில் பேச வேண்டும். தகுதியற்ற கீழ்மக்கள் சான்றோர் அறிவுரைகளை கேட்டு செம்மையான வாழ்க்கை வாழ மாட்டார்கள். ஆன்றோர் அவை நடுவில் பிறரை நிந்தித்தல் அறிவற்றோரின் இயல்பாகும்.

"தூமயங்கி ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்" என்கிறார்.

**நட்பு**

ஒருவரை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே அவர் நட்பினை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். நாலடியார் நட்பை, நட்பாராய்தல், நட்பிற் பிழை பொறுத்தல், கூடா நட்பு என்று வகைப்படுத்தியுள்ளார்.ஒருவருடைய நட்பை கல்வியறிவு, ஒழுக்கம் முதலியவற்றால் ஆராய்தல் வேண்டும். அத்தகைய நட்பு அடிக்கரும்பு போன்று இனிதாக அமையும் என்கிறார். நாறு வெறுப் பழகினாலும் மூர்க்கரது நட்பு நீர்ப்பாசி போல் இருக்குமே தவிர வேர் விடாது. வேறுவேறாக போன்ற நட்பே நாம் மேற்கொள்ளுதல் நலம். ஆதனை நாலடியார் "தெளிவிலார் நட்பின் பகை நன்று" என்று கூறுகின்றார். நட்பின் ஆழமானது நட்புக் கொண்ட பின் அவர் செய்யும் பிழைகளைப் பொறுத்துக் கொள்ளுதல் ஆகும். இதனை,

"ஏதியார் செய்த திறப்பவே தீதெனினும்
நோதக்க தென்னுண்டாம் நோக்குங்கால் - காதல்
கழுமியார் செய்த கறங்குருவி நாட!
விழுமிதாம் நெஞ்சத்தள் நின்று" என்கிறார் நாலடியார்.

ஒருவனது முன்னேற்றத்திற்குப் பெற்றோரும் ஆசிரியரும் எவ்வளவு முக்கியமோ,அதுபோல நண்பனும் மிக முக்கியமானவன் ஆகின்றான். நண்பன் என்பவன் இன்பத்தில் மட்டுமல்ல, துன்பத்திலும் பங்கு கொள்ள வேண்டும். ஒருவனது நற்செயல்களைப் பாராட்டி ஊக்கப்படுத்தவும், அவனது தீய செயல்களை அன்போடு கண்டித்து நல்வழிபடுத்தவும் நட்பு மிகவும் உறுதுணையாக நிற்கின்றது. நம்பிக்கையான நட்பே ஒருவனுக்கு மனமகிழ்ச்சி, மனநிறைவு, எண்ணியதை முடிக்க கொடுக்கும் முழு ஒத்துழைப்பு ஆகியவை தந்து சிகரங்களைத் தொட துணை செய்கின்றது. நட்பானது நீடித்த இன்பம் தரச் சில பெருந்தகையான குண இயல்புகளை இருசாரரும் பெற்றிடல் அவசியமாகின்றது. தடைகளைத் தாண்டிச் செல்வதால் நட்பு மேலும் வலுப்பெற்றுச் சிறப்படைகின்றது எனலாம்.

**பன்னெறி**

பலவகை ஒழுக்க நெறிகளை உணர்த்துவது பன்னெறியாகும். இல்லறப் பெண் அடக்கமும்,சுறுசுறுப்பும், நற்பண்புகளும், அறிவும்,அன்பும் உடையவளாக திகழ வேண்டும். உலகப் பொருட்களின் மூலம் தம்மைத் தெளிவுடையவராக உயர்த்திக் கொள்ளும் மக்களே உயர்ந்தோராவர். மகன் அறவொழுக்கமுடன் திகழ வேண்டும் என்று விரும்பும் தந்தை, தான் முதலில் நல்லொழுக்கமுடையவராகத் திகழ வேண்டும். உலக நிலை கொண்டு மக்களை மதிப்பீடு செய்யக் கூடாது. பிறருக்கு உதவி செய்து நற்செயல்கள் புரியாதோர் இருப்பதும் இறப்பதும் ஒன்றே. சுயநலம், குற்றம் பாராட்டல், பிறர் புண்பட நடத்தல், விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் இன்மை, உதவாமை, அலட்சியப் போக்கு இவற்றை புறக்கணித்து நாலடியார் காட்டும் நன்னெறிகளை பின்பற்றி வழமோடு வாழ்வோம்.

**முடிவுரை**

சமூகத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவ வேண்டுமெனில் ஒவ்வொரு தனிமனிதனும் சில கடமைகளையும் கட்டுபாடுகளையும் ஒழுக்கங்களையும் விதித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்புகள்தான் வாழ்வியல் நெறிமுறைகள். வாழ்வியல் நெறிகளை எடுத்துரைப்பதில் நாலடியார் மிகச் சிறந்த நூலாக திகழ்கிறது. வாழ்வியல் நெறிகளை பின்பற்றி இப்பூவுலகில் நீண்ட காலம் சிறப்புடன் வாழ்வோம்.